# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## TML 2.21 – GRAMMAR OF TAMIL LANGUAGE

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

## பகுதி - I

01. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள்பற்றி நன்னூலில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விளக்கி, தற்காலத் தமிழில் அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்க.

02. பகுபதவுறுப்புகள் என நன்னூலார் கூறுவனவற்றை விளக்கி சொல்லாக்கத்தில் அவற்றின் பயன்பாட்டினை விபரிக்குக.

03. உயிர்முன் உயிர் அல்லது உயிர்முன் வல்லினம் எவ்வாறு புணரும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

04. மையீற்றுப் பண்புப்பெயர்விகுதி பற்றி நன்னூலார் கூறும் கருத்துக்களை விளக்கி, அவற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

## பகுதி - II

05. நன்னூலார் பெயர்ச்சொற்களை ஆறு வகையாகப் பாகுபடுத்தியிருக்கும் முறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நவீன மொழியியலாளர் பெயர்ச்சொற்களைப் பாகுபடுத்தும் விதத்தினை விளக்குக.

06. கருவி, உடனிகழ்ச்சி, உடைமை வேற்றுமைகளைப்பற்றி நன்னூல் கூறுவனவற்றைத் தெளிவுபடுத்தி, தற்காலத்தில் இவ்வேற்றுமைகள் எத்தகைய மாற்றத்திற்குட்பட்டுள்ளன என்பதை ஆராய்க.

07. வினைச்சொல் என்றால் என்ன என்பதை வரையறை செய்து முற்றுவினை, எச்சவினை, உடன்பாட்டுவினை, எதிர்மறை வினை என்பன பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

08. கீழ்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக..

அ) இடைநிலை மெய்யமயக்கம்

ஆ) பெயரெச்சம் - வினையெச்சம்

இ) கொடை வேற்றுமை

ஈ) வினையாலணையும் பெயர்

உ) குறியலுகரமும் குற்றியலிகரமும்

ஊ) உரிச்சொல்

*****